Dated : 10.10.2025 (நேரம் : காலை 11.10 மணி)

STC. No.514/2024

PW 1 திரு. பிரபு

(எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**குறுக்கு விசாரணை –**

நாங்கள் வழக்கமாக ஆய்வுக்கு செல்வதுபோல் தான் அன்றைய தினம் ஆய்விற்கு சென்றோம். எந்த தேதியில் நாங்கள் அங்கு சென்று Sample எடுத்தோம் என்றால் நிறைய வருடங்கள் ஆகிவிட்டதால் தற்போது தேதி ஞாபகமில்லை. அன்றைய தினமே கைப்பற்றிய Sample–களை சென்னைக்கு ஆய்விற்கு அனுப்பிவிட்டோம். 21.07.2022 ம் தேதி நாங்கள் அவற்றை சென்னைக்கு அனுப்பிவிட்டோம். 01.08.2022 ம் தேதி அங்கு பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான், இடைப்பட்ட 11 நாட்கள் காலதாமதத்திற்கு என்ன காரணம் என்றால் நாங்கள் பதிவு தபாலில் தான் அவற்றை அனுப்பி வைத்தோம். மருந்துகளின் தரம் குறித்து எந்த தேதியில் D&D International நிறுவனத்திற்கு Show Cause Notice அனுப்பினோம் என்றால் 02.11.2022 ம் தேதி அனுப்பினோம். அவர்கள் எந்த தேதியில் பதில் கொடுத்தார்கள் என்று தேதி ஞாபகமில்லை. எதிரிகளிடமிருந்து கைப்பற்றிய மருந்துகளின் தரம் குறைவாக இருந்தது என்று ஆய்வறிக்கையில் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது, அந்த ஆய்வறிக்கை தேதி ஞாபகமில்லை. மருந்துகளின் தரம் சரியாக இல்லை என்று 28.08.2022 ம் தேதி எதிரிகளுக்கு நாங்கள் Show Cause Notice அனுப்பினோம் என்றால் சரிதான். 08.12.2022 ம் தேதிய Show Cause Notice எதிரிகளுக்கு அனுப்பினோம் என்றால் சரிதான், அதற்கு அவர்கள் 15.12.2022 ம் தேதிய பதில் கடிதம் கொடுத்தார்கள். அது 21.12.2022 ம் தேதி எங்கள் கைக்கு கிடைத்தது. இவ்வாறு மூன்று மாதம்

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2025.10.10 17:29:35 +0530

காலதாமதமாக நாங்கள் நடவடிக்கை ஆரம்பித்துள்ளோம் என்றால் சரியல்ல, அறிக்கை கிடைக்கப்பெற்றவுடன் வேலுமாணிக்கம் ஏஜென்ஸிஸ், இராமநாதபுரம், அழகு மீனாட்சி ஏஜென்ஸிஸ், மதுரை மற்றும் D&D Internationals, Bangalore ஆகிய மூன்று மொத்த மருந்து விற்பனை நிறுவனங்களுக்கு இந்த தரமற்ற மருந்தை விற்பனை செய்தது தொடர்பாக Show Cause Notice அனுப்பப்பட்டு விளக்கமும் கேட்கப்பட்டு, பதில் கடிதம் பெறப்பட்ட பின்பு தான் எதிரியின் தயாரிப்பு நிறுவனம் தான் மேற்கூறிய மருந்துகளை தயாரித்து விற்பனை செய்தது கண்டறியப்பட்டது என்பதால் உடனடியாக நடவடிக்கையை ஆரம்பித்துள்ளோம். நாங்கள் கைப்பற்றிய மருந்துகளின் உள்ளடக்கங்களின் அளவுகள் பற்றி கூறமுடியுமா என்றால் அதுப்பற்றி பகுப்பாய்வாளர்கள் தான் கூற முடியும். மருந்துகள் உற்பத்தி செய்யப்பட்ட காலம் மார்ச், 2021 அதன் Expiry Date பிப்ரவரி, 2023. Expiry ஆன தேதியிலிருந்து 13 மாதம் கழித்து காலதாமதமாக வழக்கு தாக்கல் செய்ததற்கான காரணம் என்ன என்றால் காலதாமதம் எதுவும் இல்லை, ஜுலை 2023 அன்றே வழக்கு தாக்கல் செய்துவிட்டோம். Expiry தேதிக்கு முன்பாகவே வழக்கு நடவடிக்கை தொடங்கிவிட்டோம். மருந்துகளை அறை வெப்பநிலையில் தான் பராமரிக்க வேண்டும் என்று மருந்துகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**மறு விசாரணை – இல்லை**

சாட்சி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்து காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

J JEYA SUTHAHAR

Digitally signed by J JEYA SUTHAHAR
Date: 2025.10.10 17:29:41 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
இராமநாதபுரம்.